# 11

# இரட்சகரைத் தேடுதல்

## மத்தேயு 2:1–13, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*மக்கள் [தங்கள்] வாழ்வில் பல விஷயங்களைத் தேடுகின்றார்கள்: புகழ்ச்சி, செல்வம், மகிழ்ச்சி. ஆயினும், இயேசுவின் வார்த்தைகளைக் கடன் வாங்க வேண்டுமென்றால், "தேவையானது ஒன்றே" (லூக். 10:42அ): கர்த்தரைத் தேடுதல். மார்ஸ் மேடையில் பவுல் தமது உரையைக் கேட்டவர்களுக்கு, கர்த்தர் "எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற[வர்] ... கர்த்தராகிய ... தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார் ..." (அப். 17:25-27அ) என்று கூறினார். தாவீது, "தேவனே நீர் என்னுடைய தேவன்; ... உம்மைத் தேடுகிறேன்" (சங். 63:1) என்று ஜெபித்தார். இஸ்ரவேல் மக்களை "உன் தேவனாகிய கர்த்தரைத் தேடுவாய்" என்று ஊக்கப்படுத்திய மோசே, அவர்களுக்கு "உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய்" என்றும் உறுதியளித்தார் (உபா. 4:29).[1]*

*இந்த பிரசங்கத்தில் நாம் கர்த்தரை "தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும்" (2 நாளா. 15:12) தேடிய மனிதர்களின் குழு ஒன்றை எதிர்கொள்ளுவோம். நான் ஏறக்குறைய "மூன்று மனிதர்கள் கர்த்தரைத் தேடினார்கள்" என்று கூறினேன், ஏனென்றால் இவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் "மூன்று" என்ற எண்ணிக்கையானது எவ்வித மாற்றமும் இன்றிப் பயன்படுத்தப்படுகிறது. பெத்லகேமில் இயேசு பிறந்தபோது, அந்தக் குழந்தை இயேசுவை ஆராதிக்க வந்த சாஸ்திரிகளை நான் குறிப்பிடுவதை, நீங்கள் அநேகமாக யூகித்திருப்பீர்கள்.*

*இந்தப் பிரசங்கம் மிகவும் எளிமையானதாக உள்ளது: சாஸ்திரிகள் இயேசுவைத் தேடினார்கள், அவர்கள் இயேசுவைக் கண்டார்கள், அவர்கள் இயேசுவை ஆராதித்தார்கள், மற்றும் இதன் விளைவாக அவர்களின் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட்டது என்பவற்றை நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.[2] நீங்களும் நானும் அவர்களின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்க நான் விரும்புகின்றேன். இது நன்கு அறியப்பட்ட ஒரு வரலாறாக இருப்பதால், நன்கு அறிந்த விவரங்களைப் பற்றி நான் அதிக நேரம் செலவிட மாட்டேன்[3] ஆனால் பின்வரும் கேள்வியை நான் கேட்பேன்: "நாம் அவர்களைப் போல ஞானமுள்ளவர்களாய் இருக்கின்றோமா?"[4]*

# *அவர்கள் இயேசுவைத் தேடினார்கள்*
# *(வ. 1-9, 11, 13)*

***சாஸ்திரிகள்***

> *ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்" என்றார்கள் (வ. 1, 2).*

*இயேசுவைத் தேடியவர்களைப் பற்றிக் கலந்துரையாட நாம் ஒரு சில கணங்களை எடுத்துக் கொள்வது அவசியமாக உள்ளது. மத்தேயு 2ன் உண்மையான பார்வையாளர்கள் மறைக்கப்படுமளவுக்கு இந்த ஞானி களைச் சுற்றிலும் மிக அதிகமான பாரம்பரியக் கதைகள் போர்த்தப் பட்டுள்ளன.*[5]

*இந்த மனிதர்கள் சாஸ்திரிகள்* [Magi[6]] *என்று அழைக்கப்படுகின்றார்கள்.* "Magi" *என்ற வார்த்தையில் இருந்துதான் நாம்* "Magic" *மற்றும்* "Magician" *என்ற வார்த்தைகளைப் பெறுகின்றோம். அந்த நாட்களில், சாஸ்திரிகள்* [Magi] *என்னப்பட்டவர்கள் தங்கள் அறிவு மற்றும் உணர்ந்தறிதல் ஆகியவற்றிற்காகப் பெயர் பெற்றவர்களாக இருந்தார்கள் - இவ்விதமாக நாம் அடிக்கடி "ஞானிகள்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின் றோம். இன்றைய நாட்களின் தராதரத்தின்படியாக, அவர்களின் அறிவானது குறைபாடுள்ளதாக, அறிவியலும் மூட நம்பிக்கையும் கலந்ததாக இருந்தது. இருந்தபோதிலும், அவர்கள் ஞானத்திற்காகப் பெயர்பெற்றவர்களாக இருந்தார்கள் மற்றும் பெரும்பாலும் அவர்கள் அரசர்களுக்கு ஆலோசகர்களாகப் பணியாற்றினார்கள்.*

*இந்த சாஸ்திரிகள் மூன்றுபேர் இருந்ததாகப் பிரபலமாக நினைக்கப் படுகிறது - இது அநேகமாக, பிற்பாடு, மூன்று காணிக்கைகள் குறிப்பிடப் பட்டதால் ஏற்பட்டிருக்கும் (வ. 11) - ஆனால், மூன்று காணிக்கைகள் ஒரு சிலராலோ அல்லது அதிகமானவர்களாலோ தரப்பட்டிருக்கக் கூடும்.* "Magi" *என்பது பன்மைச் சொல்லாகும், எனவே அவர்கள் குறைந்தது இருவர் இருந்தனர் என்று நாம் அறிகின்றோம், ஆனால் பன்னிரெண்டு பேர்களோ அல்லது அதற்கும் அதிகமானவர்களோ கூட இருந்திருக்கக் கூடும்.*[7]

*சாஸ்திரிகள் "கிழக்கில்" இருந்து வந்தார்கள், ஆனால் அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று நமக்குக் கூறப்படுவதில்லை. அவர்கள் கொண்டு வந்த காணிக்கைகளின் காரணமாகக் கல்வியாளர்களில் சிலர், அவர்கள் அரபு நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று நம்புகின்றார்கள். பெர்சியா நாடு என்பது மிகச் சிறந்த யூகமாய் உள்ளது, ஏனென்றால் சாஸ்திரிகள் அங்கு தான் தோன்றி மலர்ந்தார்கள். உண்மையில், அவர்கள் தங்கள் பயணத்தை எங்கு தொடங்கினார்கள் என்று நாம் அறிவதில்லை. பலஸ்தீனத்திற்குக் கிழக்கில் அரபு, பெர்சியா, பாபிலோன்,*

*மெசப்பொத்தாமியாவின் முழுப்பகுதி, இந்தியா மற்றும் பிற நாடுகள் இருந்தன.*

*அந்த மனிதர்களைப் பற்றிய ஒரு விவரம் தெளிவானதாக உள்ளது: அவர்கள் புற இனத்தாராக (புறஜாதியாராக) இருந்தார்கள். அவர்கள், "எங்கள் ராஜா" என்று கூறாமல், "யூதருக்கு ராஜா" என்று கூறினார்கள். குழந்தை இயேசு தேவாயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, அவர் "புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாக" (லூக். 2:30) இருப்பார் என்று, முதியவரான சிமியோன் கூறினார்.[8] சாஸ்திரிகள் பற்றிய வரலாறானது, கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்ச்சியின் உலகளாவிய மறைகருத்துக்களை முக்கியத்துவப்படுத்துகிறது. இயேசு இஸ்ரவேல் மக்களுக்கு மாத்திரம் இரட்சகராயிராமல், அவர் ''உலகத்தின் இரட்சகராக'' இருக்க வேண்டியிருந்தது (யோவா. 4:42).*

*இந்த மனிதர்களைப் பற்றி நாம் அறியாதவை அதிகமாக உள்ளன, ஆனால் இவர்களின் தனிச்சிறப்பான பண்பைப் பற்றி நாம் அறிகின்றோம்: இவர்கள் ''யூதர்களின் ராஜாவை'' விடாப்பிடியாகத் தேடுபவர்களாக இருந்தார்கள். இவர்களின் உண்மையான ஞானம் இவர்களுடைய பல பத்தாண்டுகளான படிப்பு அல்லது இயல்பான உலகைப் பற்றிய இவர்களின் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றில் இராமல், உண்மையில் மிகவும் முக்கியமானது எது என்பதை அவர்கள் புரிந்துகொண்டதிலேயே இருந்தது. நீங்கள் உயர்ந்த மதிநுட்பம் அல்லது நல்ல கல்வியறிவு கொண்டவர்களாய் இருந்தாலும், இல்லாவிட்டாலும், நீங்கள் உண்மையாகவே ''ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமான" (வெளி. 19:16) அவரைத் தேடுவீர்கள் என்றால், ஞானவான்களாய் இருப்பீர்கள்.*

**நோக்கம்**

*சாஸ்திரிகள் பலஸ்தீனத்திற்கு நீண்ட மற்றும் கடினமான பயணத்தை மேற்கொண்டது எதற்காக? அவர்கள் தங்கள் பொருட்களை விற்கும் வர்த்தகர்களாக வந்தார்களா? இல்லை. இவர்கள் மத்திய தரைக் கடலில் நீந்தவோ அல்லது சவக்கடலில் மிதக்கவோ விருப்பம் கொண்டவர்களாகச் சுற்றுலாப் பயணிகளாக வந்தார்களா? இல்லை. இவர்கள் ஏரோது அரசருடன் சாதகமான உறவுமுறையை நிலைநாட்டுவதற்காகத் தூதர்களாக வந்தார்களா? இல்லை. இவர்கள் எருசலேமை அடைந்தபோது, "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" (மத். 2:2அ) என்று கேட்டார்கள். இவர்கள் ஒரே ஒரு நோக்கத்திற்காகவே பாலஸ்தீனத்திற்கு வந்தார்கள். மேசியாவைக் காண்பதற்காக.*

*தெளிவாக, அவர்கள் அவரைக் காணும்படி விரும்பியது ஏன்? அவர்கள், "நாங்கள் ... அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்" (வ. 2ஆ) என்றார்கள். அவர் "யூதர்களுக்கு ராஜாவாக இருந்தார்" என்று மட்டும் இருக்கவில்லை; அவர்களுக்கும் அவர் ராஜாவாக இருந்தார். அவர்கள் அவர் முன்னால் விழுந்து வணங்குவதற்காக நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்து வந்திருந்தார்கள்.*

*இந்த மனிதர்களைப் போல நாம் ஞானமுள்ளவர்களாக இருந்தால்,*

இயேசுவை நாம் தேடுதலில் எந்தத் தியாகமும் பெரியதாக இருப்பதில்லை என்பது நாம் கற்பது அவசியமாக உள்ளது. தேவன் "கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித் திருக்கிறார்" (எபே. 1:3). அந்த ஆசீர்வாதங்கள் வேறெங்கும் காணப் படுவதில்லை. கர்த்தரைத் தேடுவதை தங்கள் வாழ்வைச்செலுத்தத் தூண்டுதலாய் ஏற்படுத்தும் நேர்மையான ஆத்துமாக்களுக்காகத் தேவன் இன்னமும் கண்ணோக்கிக்கொண்டு இருக்கின்றார். அவர் "தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவராக" (எபி. 11:6) இருப்பதை இன்னமும் தொடர்ந்து செய்கின்றார்.

**செய்முறை**

சாஸ்திரிகளைப்பற்றியும் அவர்களின் நோக்கத்தைப்பற்றியும் சிலவற்றை நாம் புரிந்துகொள்ளும்போது, அவர்கள் எவ்வாறு அந்த நோக்கத்தைச் சாத்தியமான வகையில் நிறைவேற்ற முடிந்தது என்று நாம் ஆச்சரியப்படலாம். அவர்கள் புறஜாதியாராக இருந்தார்கள். அவர்கள் யூதர்களின் ராஜாவைப் பற்றி அறிதல் என்பதுகூட எவ்வாறு முடிந்தது? அவரைப்பற்றி அவர்கள் அறிந்தவுடனே, அவரைக் காண்பது எப்படி என்பதை அவர்கள் எவ்வாறு அறிய முடிந்தது?

அவர்கள் கிறிஸ்துவைப்பற்றித் தங்கள் அயலகத்து யூதர்கள் மூலமாக அறிந்தார்கள் என்று சிலர் யூகிக்கின்றார்கள். இது சாத்தியமானதாகவே உள்ளது. அந்தக் காலத்தில், யூதர்கள் உலகம் முழுவதிலும் சிதறியிருந்தார் கள்.[9] அயல்நாடுகளில் அவர்கள் தங்கள் வர்த்தகங்களைச் செய்துகொண்டு இருந்ததுடன், தங்கள் விசுவாசத்தையும் பகிர்ந்துகொண்டு இருந்தார்கள்.[10]

சாஸ்திரிகள் எவ்வாறு இயேசுவைப் பற்றி அறிந்தார்கள் என்பது பற்றி "கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு" என்ற வார்த்தைகளில் ஒரே ஒரு துப்பு மாத்திரம் காணப்படுகிறது. நட்சத்திரம் என்பது ஒரு இயற்கையான கட்புலனாகும் நிகழ்வு என்று சிலர் நம்புகின்றார்கள். ஜோஸியம் என்பது இந்த சாஸ்திரிகளால் நாடப்பட்ட போலி விஞ்ஞானங் களில் ஒன்றாக இருந்தது. பழைய ஏற்பாடானது ஜோஸியத்தை ஏளனம் செய்கிறது (ஏசா. 47:13-15; தானி. 1:20; 2:27; 4:7; 5:7, 8), மற்றும் அது தேவனு டைய மக்கள் ஜோஸியத்தில் ஈடுபாடு கொள்வதைத் தடை செய்கிறது (எரே. 10:1, 2). இருந்தபோதிலும், ஞானிகள் ஜோஸியத்தில் கொண்டிருந்த ஆர்வம்தான் அவர்களை எருசலேமுக்குக் கொண்டுவந்தது என்று பலர் இணங்கி ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். சாஸ்திரிகள் மேற்கு முகமாய்ப் பயணப்படும்படியாக அவர்களைத் தூண்டிய வானத்திற்குரிய உருவரை பற்றிய யூகங்களினால் பல பக்கங்கள் நிரப்பப்பட்டுள்ளன.[11]

இந்த ஞானிகள் மேசியாவைப் பற்றி எவ்வாறு அறிந்தார்கள் என்பது பற்றியும் இவர்கள் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தைப் பின்பற்ற வேண்டும் என்று எவ்வாறு முடிவு செய்தார்கள் என்பது பற்றியும் தீர்க்கமாய் ஆராய்ந்த பின்பு, J.W. மெக்கார்வி அவர்களால் பல ஆண்டுகளுக்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட அதே முடிவையே நானும் மேற்கொண்டேன். மெக்கார்வி அவர்கள், ஞானிகள் மீதான சாத்தியமான எல்லா ஆதிக்கங்

களையும் பட்டியலிட்டு அதன் பின்பு, "ஆனால் இவை யாவற்றையும் ஒன்றுகூட்டி எடுத்துக்கொண்டாலும் அது சாஸ்திரிகளின் வருகைக்கு பொறுப்பாயிராது. அவர்கள் நேரடியாக தேவனால் வழிநடத்தப்பட்டார்கள், வேறு எதுவும் அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்தியிருக்க முடியாது."[12]

பழைய ஏற்பாடானது யூதர்களுடன் தேவனின் செயல்பாடுகள் பற்றி கவனம் செலுத்துகிறது என்றாலும், தேவன் யூதத்துவமற்ற உலகத்தை முற்றிலுமாகப் புறக்கணித்து விடவில்லை. நாம், தேவன் புறஜாதியாருடன் செயல்பட்டது பற்றிச் சிறிதளவே அறிகின்றோம், ஏனென்றால் தேவன் தமது குமாரன் வருவதற்காக ஒரு இனத்தை (இஸ்ரவேல் இனத்தை) எவ்வாறு தயார் செய்தார் என்பதைக் கூறுவதே பழைய ஏற்பாட்டின் நோக்கமாக உள்ளது. இருந்தபோதிலும், பழைய ஏற்பாடானது அவ்வப்போது யூதர்களின் புறஜாதி அயலகத்தவர்களின்மீது கர்த்தருடைய அக்கறை பற்றிய குறிப்புகளைக் கொடுக்கிறது. எடுத்துக்காட்டாக, தேவன் யோனாவை, புறஜாதியாரின் நகரமான நினிவேக்கு அனுப்பினார் (யோனா. 1:1, 2). விரிவான ஒரு மேசியாத்துவ எடுத்துரைப்பைக் கூறுவதற்குத் தேவன் பாலாம் என்ற பெயர்கொண்ட ஒரு யூதரல்லாதவரைக் கூடப் பயன் படுத்தினார்: "ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்" (எண். 24:17). ஞானிகளின் வரலாறானது புறஜாதிகளின் மீது தேவன் கொண்டிருந்த ஆர்வத்திற்கான இன்னுமொரு உதாரணமாகக் காணப்படுகிறது.

தேவன் ஏதோ ஒரு வழியில் அந்த சாஸ்திரிகள் இயேசுவின் பிறப்பை அறியும்படி செய்தார் மற்றும் அவர் ஏதோ ஒரு வழியில் அவர்கள் மேசியாவை எவ்வாறு காண முடியும் என்பதைத் தெரிவித்தார் என்பது மட்டுமே நாம் உறுதியுடன் கூறக் கூடியதாக உள்ளது. பிற்பாடு, தேவன் அந்த ஞானிகளிடத்தில் ஒரு கனவில் பேசினார் (மத். 2:12). ஒருவேளை கர்த்தர், யூதர்களின் ராஜாவைப் பற்றிய தொடக்கத் தகவலுக்கு இதேபோன்ற ஒரு செயல்முறையைப் பயன்படுத்தியிருக்கலாம்.

கீழ்த்திசையிலிருந்து வந்த ஞானிகளைத் தேவன் வழிநடத்தினார் என்பதற்காக ஆதாரம் தேவைப்படுகிறது என்றால், அந்த நட்சத்திரமே அந்த ஆதாரத்தை தருகிறதாக உள்ளது. சாஸ்திரிகளுக்குக் காணப்பட்ட அந்த நட்சத்திரம் போன்ற வான்பொருட்கள் வேறு எதுவும் நகருவது இல்லை; எந்த நட்சத்திரமும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நகருவதில்லை, எந்த நட்சத்திரமும் நிற்பதோ அல்லது ஒரு பூமிக்குரிய இடத்தின் "மீது [நிலையாக] நிற்பதோ" இல்லை (மத். 2:9).

இன்றைய நாட்களில் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு நாம் இதை நடைமுறைப்படுத்த இயலும். முதலாவதாக நான், சிறு ராஜாவை ஞானிகள் காணுதலில் தேவன் ஆர்வம் கொண்டிருந்தது போலவே நீங்கள் இரட்சகரைக் காணுதலிலும் அவர் ஆர்வமுள்ளவராக இருக்கின்றார் என்று நான் கருத்துத் தெரிவிப்பேன். மேலும், நீங்கள் இரட்சகரைத் தேடுவதற்கு மனவிருப்பமாயிருந்தால், அவரைக் கண்டறிவதில் அவர் [தேவன்] உங்களுக்கு (அற்புதவிதமாக அல்ல ஆனால் அருளிரக்கத்தில்) உதவுவார் என்றும் நான் கருத்துத் தெரிவிக்கின்றேன்.

*ஆயினும் நீங்கள் இயேசுவைக் காண வேண்டுமென்றால், நீங்கள் தேவனுடைய வழிநடத்துதலை ஏற்றுக்கொள்ள மனவிருப்பமாய் இருக்க வேண்டும். "மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் ..." (எரே. 10:23) அறிகிறோம்: வழக்காடுதல் என்பது முக்கியமானதாகவே உள்ளது (ஏசா. 1:18) ஆனால் அது வெளிப்படுத்துதலின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது. " 'என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று' கர்த்தர் சொல்லுகிறார். 'பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது' " (ஏசா. 55:8, 9).*

*நீங்கள் தேவனுடைய வழிநடத்துதலை ஏற்றுக்கொண்டவுடனே, அதை நீங்கள் உடனடியாகப் பின்பற்றத் தயாராயிருக்க வேண்டும். சாஸ்திரிகளுக்குத் தேவன் தமது செய்தியை அறிவித்த பின்பு (இதை அவர் எப்படிச் செய்திருப்பினும்), அவர்கள் தயங்கிக் கொண்டிருக்கவில்லை. உடனே அவர்கள் நூற்றுக் கணக்கான மைல்கள் தூரமும், பல ஆண்டுகள் களைப்புமிக்க பயணமும் கொண்ட தொலைப்பயணம் ஒன்றை மேற்கொண்டார்கள்.*

*தேவைப்படும் இன்னொரு தகுதி குறிப்பிடப்பட வேண்டும்: தேவனுடைய வழிநடத்துதலைப் பின்பற்றுவதற்கு நீங்கள் தாழ்மையுடன் நிலைநிற்க வேண்டும். ஞானிகள் தங்கள் வீடுகளில் இருந்து புறப்பட்ட போது, அவர்கள் கடைசியில் சென்று சேரும் இடம் எது என்று அறிந்திருக்கவில்லை; அவர்கள் நட்சத்திரத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதை மட்டும் அறிந்திருந்தார்கள். அவர்கள் எருசலேம் வந்து சேர்ந்த போது, அடுத்து எங்கு செல்வது என்று அறியாமல் இருந்தார்கள். அதிர்ஷ்டவசமாக அவர்கள் வழியை கேட்பதில் மிகவும் கர்வமுடையவர்களாக இருக்கவில்லை. (நம்மில் சில மனிதர்கள், பழக்கமில்லாத இடமொன்றில் பயணப்படும்போது வழி கேட்பதில் மனவிருப்பமற்றவர்கள் என்று பெயர் பெற்றுள்ளோம்.) கர்த்தரைத் தேடுவதற்குத் தாழ்மை என்பது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.*[13]

*நாம் படிக்கும் வரலாற்றிற்குத் திரும்புவதில் நான், தேவன் தமது வேத வசனங்களின் மூலமாக, அவர்களின் பயணத்தில் மிகவும் முக்கியமான அறிவுறுத்துதலை வெளிப்படுத்தினார் என்பதை நான் தனிச்சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாகக் காண்கின்றேன். நட்சத்திரமானது அவர்களை எருசலேம் வரை மட்டுமே வழிநடத்திற்று. அவர்களுக்கு இன்னமும் வசனத்திலிருந்து தகவல் தேவைப்பட்டது. என்ன நடந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்: சாஸ்திரிகளின் விசாரித்தலை ஏரோது அரசன் கேட்டபோது, அவன் யூதத்தலைவர்களை வரவழைத்து, "கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்" (மத். 2:4). அவர்கள் பின்வருமாறு பதில் அளித்தார்கள்:*

*யூதேயாவிலுள்ள*[14] *பெத்லகேமிலே பிறப்பார்; அதேனென்றால்:*

> *"யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல, என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்தி லிருந்து புறப்படுவார்'' என்று தீர்க்கதரிசியினால் எழுதப் பட்டிருக்கிறது (வ. 5, 6).[15]*

*ராஜாவின் கேள்விகளுக்குப் பதில் அளிக்க அவர்கள் வேத வசனத்திடம் - மீகா 5:2 வசனத்திடம் செல்ல வேண்டியதாயிருந்தது.[16]*

*வேதாகமத்திற்கு வெளியே[யும்] நீங்கள் தேவனைப் பற்றிச் சிலவற்றைக் கற்றுக்கொள்ள இயலும். அவர் இந்த உலகத்தில் செயல் படுவராக இருக்கின்றார். அவர் சூரிய ஒளியையும் மழையையும் அனுப்பு கின்றார் (மத். 5:45). "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப் படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது'' (சங். 19:1). ஓரளவுக்கு, ''காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள்" அவருடைய படைப்பின் மூலம் புரிந்துகொள்ளப்பட முடியும் (ரோமர் 1:20). இருந்தபோதிலும், நாம் அவரைத் தேடி கண்டோமென்றால், நிறைவில் நாம் வசனத்திடத்தில் வரவேண்டும் ("வேண்டும்" என்ற வார்த்தையை உங்கள் சிந்தையில் அடிக்கோடிடுங்கள்). வேத வசனங்களைப் பற்றிப் பேசும்போது இயேசு, ''அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே; என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" என்று கூறினார் (யோவா. 5:39).*

*யாக்கோபு, ''உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று எழுதினார் (யாக். 1:21). "கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்கள்'' என்று பவுல் கூறினார் (2 தீமோ. 3:15). உங்களை வழிநடத்துவதற்குத் தேவன் வானத்தில் ஒரு நட்சத்திரத்தைக் கொடுக்க மாட்டார், ஆனால் உங்களை வழிநடத்து வதற்கு அவர் பரலோக ஒளியூட்டுதலை - தமது புத்தகத்தில் - கொடுத்துள் ளார். சங்கீதக்காரர், வசனத்தை "என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது என்று விவரித்தார் (சங். 119:105).*

*சாஸ்திரிகளைப்போலவே நாம் ஞானமுள்ளவர்களாக இருந்தால், நாம் தேவனுடைய வசனத்தைப் படிக்கவும் அது கூறுகிறபடி செய்யவும் மனவிருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். புதிய ஏற்பாடானது கர்த்தரிடத்தில் செல்லும் நமது வழியில் நாம் பின்பற்ற வேண்டிய பாதையை வெளிப்படுத்துகிறது: நாம் இயேசுவில் விசுவாசம் கொள்ள வேண்டும் (யோவா. 3:16); நாம் நமது பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டும் (லூக். 13:3); நாம் இயேசுவின் மீது கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் (மத். 10:32); நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் (தண்ணீருக்குள் முழுக்காட்டப்பட வேண்டும்) (மாற். 16:16; அப். 2:38). நாம் பெறும் ஞானஸ்நானம் நம்மை "கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது" என்று வேதாகமம் கூறுகிறது (ரோமர் 6:3; கலா. 3:27) - மற்றும் கிறிஸ்துவுடன்*

*இருத்தல் என்பதே நமது இலக்காக உள்ளது! அவருடனான நமது இல்லம் என்பதே நமது விருப்பத்திற்குரிய அடைவிடமாக உள்ளது!*

## *அவர்கள் இயேசுவைக் கண்டார்கள் (வ. 7-11)*

*சாஸ்திரிகள் இயேசுவைக் கண்டார்கள். நீங்கள் தேடுவது ஒரு அறியப்படாத அடைவிடமோ அல்லது நீங்கள் இடம் மாற்றி வைத்து விட்ட சில சாவிகளோ, எதுவாயிருப்பினும், அதைக் கண்டறிதல் என்பது மெய்சிலிர்க்கும் செயலாக உள்ளது.*[17] *ஆயினும் இரட்சகரைக் கண்டறிவதில் உள்ள மெய்சிலிர்ப்புக்கு ஒப்பானது ஒன்றும் இல்லை!*

*கிறிஸ்து பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே, தாவீது தமது மகனான சாலொமோனிடம், ''நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்'' (1 நாளா. 28:9) என்று கூறியிருந்தார். சாஸ்திரிகள் இயேசுவைச் சரியான வழியில், சரியான எண்ணப்போக்குடன் தேடியதால், அவர்கள் அவரைக் கண்டு அறிதலைத் தேவன் நிச்சயப்படுத்தினார்.*

*மேசியா எங்கு பிறக்க வேண்டியதாயிருந்தது என்று ஞானிகளுக்குக் கூறப்பட்ட உடனேயே, அவர்கள் எருசலேமில் இருந்து தெற்கு நோக்கிப் பயணப்பட்டார்கள் (வ. 7-9அ). அவர்கள் பெத்லகேம் நோக்கிய ஐந்து மைல்கள் பயணத்தைத் தொடங்கியபோது, நட்சத்திரம் மீண்டும் தோன்றியது.*[18] *"அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்'' (வ. 10). அவர்கள் தாங்கள் சரியான பாதையில் இருப்பதை அறிந்தார்கள். நட்சத்திரம் ''பிள்ளை இருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்கு முன்சென்றது" (வ. 9). கடைசியில், "அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையை யும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டார்கள்" (வ. 11அ).*

*அவர்கள் அவ்வளவு நீண்ட நாட்களாகத் தேடியிருந்த ஒருவரை அவர்கள் கண்டபோது, அனுபவித்திருக்கக் கூடிய மகிழ்ச்சியைக் கற்பனை செய்ய முயற்சி செய்யுங்கள். பல ஆண்டுகளுக்கு முன்பாக, மக்கள் ஒரு கண்டுபிடிப்பை முடித்தபோது, "Eureka!" என்று சத்தமிட்டார்கள். (Eureka என்பது, "நான் அதைக் கண்டுபிடித்து விட்டேன்!" என்று அர்த்தம் தருகிற கிரேக்க வார்த்தையாக உள்ளது) மரியாளுடைய கரங்களில் பிள்ளை இருந்ததை சாஸ்திரிகள் கண்ணோக்கியபோது, அவர்கள் சத்தமிட்டது என்ன என்றோ - அல்லது அவர்கள் ஏதாவது கூறினார்களா என்றோ - நான் அறியவில்லை. ஆயினும், அவர்களின் சிந்தனைகள், அவர்களின் பயணத்தில் இருந்த கடினமான சூழ்நிலைகளின் மீதோ அல்லது அவர்கள் ஏற்படுத்தி யிருந்த எந்த தியாகத்தின் மீதோ இருந்ததில்லை என்பதில் நான் உறுதியாய் இருக்கின்றேன். மாறாக அவர்களின் சிந்தைகள் அவர்களின் தேடுதல் வெற்றிகரமாக முடிவு பெற்றதால் விளைந்த மகிழ்ச்சியால் நிறைந்திருந்தன என்பது உறுதி.*

*கர்த்தரை நீங்கள் சரியான வழியில் சரியான எண்ணப்போக்குடன் தேடினால், நீங்கள் அவரைக் கண்டறிவதற்குத் தேவனும் உதவுவார். பின்பு நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகிறபோது, பிலிப்புவைப்*

*போலவே, ''நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே" (யோவா. 1:45) என்று உங்களால் கூற முடியும். ஞானிகளைப் போல, நீங்கள் "சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்'' (1 பேது. 1:8) மகிழ்வடைய முடியும்!*

## *அவர்கள் இயேசுவைப் பணிந்துகொண்டார்கள் (வ. 2, 11)*

*சாஸ்திரிகள் இயேசுவைக் கண்டபோது, அவரைப் பணிந்து கொண்டார்கள். அவர்கள் ஒரு தெய்வீக புதிரைத் தீர்த்து வைத்ததாக மேன்மை பாராட்டிக் கொள்ளக்கூடும்படிக்கு யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருந்தவரைத் தேடவில்லை. அவர்கள், "அவரைப் பணிந்துகொள்ளு வதற்காக" (வ. 2) பலஸ்தீனம் வந்திருந்ததாய் அறிவித்திருந்தார்கள். மேலும், அவர்கள் அவரைக் கண்டபோது, ''சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்து கொண்டார்கள்" (வ. 11ஆ). ராஜாதி ராஜாவாக அவர் பெறத் தகுதியான வணக்கத்தை அவர்கள் அவருக்குச் செலுத்தினார்கள் (வெளி. 19:16).[19]*

*ஆயினும் அவர்கள் அவரைப் பணிந்துகொண்டதற்கும் அதிகமான வற்றைச் செய்தார்கள். "தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்'' (மத். 2:11இ).[20] இந்தக் காணிக்கைப் பொருட்களில் சிலர் அடையாளத்துவமான தனிச்சிறப்புக்களைக் காண்கின்றார்கள்: பொன் என்பது ராஜாவுக்கு உரிய பரிசாக இருந்தது. தூபவர்க்கம் என்பது அப்பெயர் குறிப்பிடுவதுபோலவே, நறுமணப் பொருளாக இருந்தது[21]; அது ஆசாரியருக்கான பரிசாக இருந்தது. வெள்ளைப்போளம் என்பது ஒரு உடலை அடக்கம் செய்யத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்டது (யோவா. 19:39); அது இரட்சகருக்கு, நமது பாவங்களுக்காக மரிக்கவிருந்த இரட்சகருக்கு உரிய பரிசாக இருந்தது. இயேசு இந்த எல்லாமுமாக - ராஜா, ஆசாரியர் மற்றும் இரட்சகர் என்பதாக - இருந்தார், ஆனால் அநேகமாக இந்தப் பரிசுப் பொருட்கள், மதிப்புமிக்கவைகளாய் இருந்தாலும் இவை நீண்ட பயணத்தின்போது கொண்டு செல்லக் கூடியதாகவும் சிறிய இடங்கொள்ளும் வகையில் இருந்த காரணத்தினாலும் தேர்ந்துகொள்ளப் பட்டிருக்கலாம்.[22]*

*இந்த காணிக்கைப் பொருட்களின் உண்மையான தனிச்சிறப்பானது இவைகள் என்னவாக இருந்தன என்பதில் இல்லாமல், இவைகள் எதைப் பிரதிநிதித்துவப்படுத்தின என்பதிலேயே இருந்தது: இவைகள், ஞானிகள் தங்கள் ராஜாவுக்கு வணக்கத்தைச் செலுத்துவதற்கான விருப்பத்தின் வெளிப்பாடாக இருந்தன. உண்மையான ஆராதனையும் கொடுத்தலும் பிரிக்கப்பட முடியாதவைகளாக உள்ளன.[23] பழைய ஏற்பாடானது தனது பலிகளைக் கொண்டிருந்தது, புதிய ஏற்பாடானது ஒவ்வொரு வாரத்தின்*

*முதல் நாளிலும் அவரவர் மனவிருப்பத்தின்படியாகக் கொடுத்தலைக் கொண்டுள்ளது (1 கொரி. 16:1, 2; 2 கொரி. 9:7). ஆராதனையின் இந்தப் பாகத்தின்போது, சிலவேளைகளில் அதிகரிக்கும் ஒலி அளவானது, சிலர் கொடுத்தல் என்பதை ஆராதனையின் தனிச்சிறப்பான/குறிப்பிடத்தக்க பாகமாக நினைப்பதில்லை என்பதை சுட்டிக்காண்பிக்கிறது - ஆனால் அது தனிச்சிறப்பான பாகமாகவே உள்ளது.*

*கர்த்தருக்கு முன்பாக வைப்பதற்கு உங்களிடத்தில் பொன், தூபவர்க்கம் அல்லது வெள்ளைப்போளம் ஆகியவை இல்லையா? அப்படி யென்றால் உங்களிடத்தில் உள்ளவற்றில் மிகச் சிறந்ததை அவருக்குக் கொடுங்கள். முதலாவது, உங்களையே கொடுங்கள் (2 கொரி. 8:5; ரோமர் 12:1, 2ஐக் காணவும்); பின்பு உங்களுடையதைக் கொடுங்கள்; மற்றும், எப்போதும் உங்களின் மிகச் சிறந்தவற்றை கொடுங்கள். தாவீது தாம் விலைகொடுத்து வாங்காத எதையும் கர்த்தருக்கு அளிக்காதிருந்தார் (2 சாமு. 24:24).*

*சாஸ்திரிகள் இயேசுவைக் கண்டபோது, அவர்கள் அவரைப் பணிந்து கொண்டார்கள் மற்றும் அவருக்கு காணிக்கைகளைக் கொடுத்தார்கள். நாம் அவர்களைப் போல ஞானமுள்ளவர்களாக இருக்கிறோமா?[24]*

## *முடிவுரை (வ. 10, 12)*

*சாஸ்திரிகளைப் பற்றி நாம் அறியாதவை அதிகமாக உள்ளன. அவர்கள் எருசலேமுக்கு வந்து சேருவதற்கு முன்பு நாம் அவர்களைப் பற்றிச் சிறிதளவே அறிகின்றோம். அவர்கள் தங்கள் சொந்த நாடுகளுக்கு சென்ற பின்பு அவர்களைப்பற்றி நாம் ஒன்றும் அறிவதில்லை. வேதாகமத்தில் அவர்கள் நினைவுகூரத்தக்க ஒரு காட்சியில் தோன்றி விட்டுப் பின் மறைந்து போகின்றார்கள். ஆயினும் பின்வரும் ஒரு உண்மையை நாம் அறிகின் றோம்: கர்த்தரைத் தேடியதன் விளைவாக அவர்களின் வாழ்வு ஆசீர்வதிக் கப்பட்டது. வசனம் 10ஐ நினைவுகூருங்கள்: "அவர்கள் அந்த நட்சத்திரத் தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்." நேர்ப் பொருளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள மூலபாஷையானது, "அவர்கள் ஆனந்த சந்தோஷம் அடைந்தார்கள்'' என்று கூறுகிறது. அவர்கள் சந்தோஷத்தினால் நிறைந்தார்கள் என்று சுட்டிக் காண்பிக்கும் எபிரெய விளக்கத் தொடர்ச் சொல் ஒன்றை எழுத்தாளர் பயன்படுத்தினார். ஞானிகள் எவ்வளவு சந்தோஷம் அடைந்தார்கள் என்பதை நாம் அறியச் செய்வதற்கு அது ஒன்று மட்டுமே போதுமானதாக இருக்கும், ஆனால் அதன் பின்பு வசனமானது ''மிகுந்த'' மற்றும் ''அதிகமான'' என்ற வார்த்தைகளைக் கூட்டுகிறது. சாஸ்திரிகள் கர்த்தரைக் கண்டதினால், கட்டுக்கு அடங்கா சந்தோஷம் கொண்டார்கள்! அவர்கள் தங்களுக்கு முன்பு வந்திருந்த மேய்ப்பர்கள் போலவே (லூக். 2:17, 18), பெத்லகேமில் இருந்த அந்த எளிமையான வீட்டை விட்டுச் செல்லுகையில், அவர்கள் சந்தித்த எல்லாரிடத்திலும், தாங்கள் கண்டிருந்த சிறு ராஜாவைப் பற்றிக் கூறியிருக்க வேண்டும்.*

*நீங்கள் இரட்சகரைத் தேடி, அவரைக் கண்டறிந்தால், உங்கள்*

*வாழ்வும்கூட - நீங்கள் கற்பனை செய்யும் எவ்விஷயத்திற்கும் அப்பாலும் அதிகமாக - ஆசீர்வதிக்கப்படும். பவுல், "... எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்" (ரோமர் 4:7) என்று எழுதினார். மீண்டுமாக அவர், "எழுதியிருக்கிறபடி 'தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தபண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவும் இல்லை' " (1 கொரி. 2:9) என்றும் கூறினார்.*

*நாம் படித்துக் கொண்டிருந்த பாடங்கள் இயேசுவைக் குறித்து மூன்று குழுவினரான மக்களின் எண்ணப்போக்குகளை நேரெதிர்ப்படுத்திக் காண்பிக்கிறது: அங்கு கிறிஸ்துவைப் பணிந்துகொள்வதற்காக அவரைத் தேடிய ஞானிகள் இருந்தார்கள். அங்கு கிறிஸ்துவைக் கொல்வதற்காக அவரைத் தேடிய ஏரோது இருந்தான். அங்கு, இயேசு ஒரு சில மைல்கள் மட்டும் தள்ளியிருந்தாலும், அவரைக் கண்டறிவதற்கு முயற்சி எதையும் செய்யாத மதத் தலைவர்கள் இருந்தார்கள். மக்களின் இந்த மூன்று வகையினர் இன்றும் நம்மிடையே இருக்கின்றார்கள்: இயேசுவைத் தங்கள் சுயமையம்கொண்ட வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கண்டதி னால் மக்கள் சிலர் அவரை வெறுத்து, எதிர்த்து நிற்கின்றார்கள். இயேசு வையும் அவர் எப்படி தங்கள் வாழ்வை ஆசீர்வதிக்க முடியும் என்பதையும் மறந்துபோன திரளான மக்கள் இருக்கின்றார்கள். தேவனுக்கு நன்றி, ஆயினு ம், அவரைத் தேடுகின்ற ஒரு சிலர் மட்டுமே இன்னமும் இருக்கின்றார்கள். அவர்களில் நீங்களும் ஒருவராக இருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்.[25]*

---

*குறிப்புகள்*


*[1]கர்த்தரைத் தேடுதல் பற்றிய பல வசனப்பகுதிகள் உள்ளன. இங்கு குறிப்பிடப்பட்டவைகள் தவிர, என் கவனத்தை ஈர்த்த சில வசனப்பகுதிகள் பின்வருமாறு: எஸ்றா 8:22; சங். 10:4; 14:2. [2]நான் இதைப் பிரசங்கித்தபோது, "மிகப் பெரும்பான்மையான நேரம் முதல் கருத்துக்குச் செலவிடப்படும், எனவே எனது இரண்டாவது கருத்திற்குச் செல்வதற்கு முன்பு பதினைந்து அல்லது இருபது நிமிடங்கள் ஆகிவிட்டால் அதற்காகப் பதட்டம் அடையாதீர்கள்" என்று கூடுதலாகக் கூறினேன். [3]உங்கள் உரையைக்க கேட்பவர்களுக்கு இந்த வரலாறு நன்கு பழக்கப்பட்ட தாக இராவிட்டால், இதைக் கூறுவதற்கு நீங்கள் நேரம் எடுத்துக்கொள்ள விரும்பலாம். [4]ஜீன் குளோர் அவர்கள் "அரசரை வரவேற்றல்" என்ற தமது பிரசங்கத்தில், இந்த சாஸ்திரிகள் என்ன செய்தார்கள் என்று கூறினார். பின்பு, ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் அவர், "நாம் அவர்களைப் போல் ஞானமுள்ளவர்களாக இருக்கின் றோமா?" என்று கேட்டார்* ("Matthew: Introducing the King," *Truth for Today* [July 1989]: 6-8). *[5]ஏழாம் நூற்றாண்டின் புராணக்கதையொன்று மூன்று சாஸ்திரிகளின் பெயர்களைக் கூறி, அவர்கள் எந்தெந்த நாடுகளில் இருந்து வந்தார்கள் என்றும், யார் எந்தப் பரிசைக் கொண்டுவந்தார் என்றும் கூடக் குறிப்பிடுகிறது. முந்திய பாடத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டதுபோல, இயற்கையானது பௌதீக வெற்றிடத்தை வெறுத்து ஒதுக்கி, அதை நிரப்ப அவசரப்படுகிறது. மனிதர்கள் தகவலில் உள்ள வெற்றிடத்தை*

வெறுத்து ஒதுக்குகின்றார்கள். அதை அவர்கள் அறிவைக் கொண்டு நிரப்ப இயலாவிட்டால், யூகங்களைக் கொண்டு நிரப்பு வார்கள். [6]Magi பற்றிய அதிகமான விவரங்களுக்கு இதற்கு முந்திய பாடத்தில் "பாலகன் பாதுகாக்கப்பட்டார்" என்ற உட்பிரிவில் காணவும். [7]பழங்காலத்திய பாதாளக் கல்லறை வரைபடம் ஒன்று இரண்டு சாஸ்திரிகளைக் காண்பிக்கும் அதே வேளையில், பழங்காலத்திய சபையின் (ஏவுதல் பெற்றிராத) பாரம்பரியம் ஒன்று பன்னிரெண்டு சாஸ்திரிகள் வந்ததாகக் கருத்துத் தெரிவிக்கிறது. [8]மேசியா எல்லா மக்களையும் ஆசீர்வதிப்பவராயிருப்பார் என்ற உண்மையைப் பற்றி ஏசாயா 42:1, 6; 49:6, 22; மத். 12:18-21 ஆகிய வசனங்களைக் காணவும். [9]பலஸ்தீனத்திற்குக் கிழக்கே இருந்த சில யூதர்களைப் பற்றி அப். 2:9 வசனம் குறிப்பிடுகிறது. [10]மத்தேயு 23:15 ஒரு எதிர்மறை வசனப்பகுதியாக உள்ளது, ஆனால் இது யூதர்கள் [பிறமக்களை] யூதமார்க்கத்தே அமையும்படி மேற்கொள்ளும் நடவடிக்கை யைப் பற்றிப் பேசுகிறது. யோசிப்பஸின் கூற்றுப்படியாக, உலகத்தை ஆளும் அரசர் யூதேயாவிலிருந்து வருவார் என்ற கருத்து (ஓரளவுக்கு) நாடுகளில் பரவியிருந்தது.

[11]கோள்களின் சந்திப்புகள், நோவா நட்சத்திரங்கள் மற்றும் வால் நட்சத்திரங்கள் உட்பட பல்வேறு யூகங்கள் உள்ளடங்குகின்றன. இவற்றில் எதுவும், இந்த நட்சத்திரம் அல்லது இதன் செயல்பாடு பற்றிய வேத வசன விவரிப்புக்கு பொருந்தி வருவதில்லை. [12]J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 42. [13]தேவனுக்குப் பிரியமாயிருப்பதற்குத் தாழ்மையாயிருப்பதின் அவசியம் பற்றிய பல வேத வசனப்பகுதிகளில் யாக்கோபு 4:6 மற்றும் 1 பேதுரு 5:5 ஆகியவை உள்ளன. [14]"யூதேயாவிலுள்ள" என்று கூடுதலாகக் கூறப்பட்ட சொற்றொடரானது இந்த நகரை, பாலஸ்தீனத்தின் இன்னொரு பெத்லகேமில் இருந்து (யோசு. 19:15, 16; நியா. 12:8, 10) பிரித்துக் காண்பிக்கிறது. [15]"பெத்லகேம்" என்ற பெயரானது "அப்பத்தின் வீடு" என்று அர்த்தப்படுகிறது. இது "ஜீவ அப்பத்தின்" (யோவா. 6:48) பிறப்பிடமாய் இருந்தது பொருத்தமான தாகவே காணப்படுகிறது. [16]வேதபாரகரும் ஆசாரியரும் 2 சாமுவேல் 5:2ல் இருந்தும் ஒரு சொற்றொடரைக் கூடுதலாகக் கூறினார்கள். [17]நீங்கள் தேடிக் கண்டுபிடித்த சிலவற்றின் சொந்த உதாரணத்தை நீங்கள் இவ்விடத்தில் கொடுக்க விரும்பலாம். லூக்கா 15, இழந்து போனதைத் தேடி, அதைக் கண்டு பிடித்ததினால், ஒரு மேய்ப்பரால் அனுபவிக்கப்பட்ட சந்தோஷத்தைப் பற்றியும் ஒரு பெண்ணினால் அனுபவிக்கப்பட்ட மகிழ்ச்சியைப் பற்றியும் கூறுகிறது. [18]இது வேத வசனத்தினால் மறைமுகமாகக் குறிப்பிடப்படுகிறது. நட்சத்திரத் தைப் பற்றி நாம் அறியாதவைகள் பல உள்ளன - அது உண்மையிலேயே ஒவ்வொரு இரவிலும் காணப்பட்டதா அல்லது அவ்வப்போது மட்டும் காணப்பட்டதா என்பவை போன்ற விஷயங்கள் நம்மால் அறியப்பட்டிருப்பதில்லை. [19]"பணிந்துகொள்ள" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது தேவனுக்கு அல்லது மனிதருக்குச் செலுத்தப்படும் மரியாதைமிக்க வணக்கத்தைக் குறிப்பிடக் கூடும். ஆகவே, சாஸ்திரிகள் இயேசுவை தேவன் என்ற வகையில் பணிந்து கொண்டார்களா அல்லது அவரது அரசத்துவத்தை மட்டும் ஏற்றுக் கொண்டார்களா என்பது பற்றிச் சிலர் கேள்வி எழுப்புகின்றார்கள். மத்தேயு, ''பணிந்துகொள்ளுதல்'' என்ற வார்த்தையை ''தேவனுக்கு வணக்கம்'' என்ற சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படும் அர்த்தத்திலேயே பயன்படுத்துகின்றார் - இவ்விடத்திலும் அந்த வார்த்தை அதுபோன்றே பயன்படுத்தப்பட்டிருப்பதாகவே காணப்படுகிறது. [20]மூன்று பரிசுகள் பற்றிய அதிகமான விவரங்களை நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் என்ற முந்திய பாடத்தில் காணவும்.

[21]தூபவர்க்கம் என்பது ஆசரிப்புக் கூடாரத்தில் பயன்படுத்தப்பட்ட

நறுமணப்பொருளின் கூட்டுப்பொருளாக இருந்தது (யாத். 30:34-38). [22]தேவனுடைய அருளிரக்கத்தினால், இந்தப் பரிசுப்பொருட்கள் யோசேப்பினால் எகிப்து நாட்டிற்குள் சுலபமாகக்கொண்டு போகப்படவும் முடிந்திருக்கும். [23]நீங்கள் ஆராதிக்காமலேயே கொடுக்க முடியும் ஆனால் நீங்கள் கொடுக்காமல் ஆராதிக்க முடியாது என்று யாரோ ஒருவர் கூறினார்; ஏனெனில் நீங்கள் துதியில் தேவனுக்கு உங்கள் ஆத்துமா, இருதயம் மற்றும் ஆவி ஆகியவற்றை முன்வைக்க வேண்டும். [24]இந்த வரிசைத் தொடரைக் குறிப்பிட நேரம் எடுத்துக்கொள்வதற்கு நீங்கள் விரும்பலாம்: தேவன் ஞானிகளை எவ்வாறு எச்சரித்தார் மற்றும் அவர்கள் எவ்வாறு வேறொரு வழியாகத் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பினார்கள் (மத். 2:12). சில பிரசங்கியார்கள் இவ்விடத்தில் கூடுதலாக ஒரு நடைமுறைப் பயன்பாட்டைக் குறிப்பிடுகின்றார்கள்: சாஸ்திரிகள் ''வேறு வழியாய்த் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போனது'' (மத். 2:12) போலவே, நாம் கிறிஸ்தவர்களானதற்குப் பின்பு நாமும் வேறு வழியாகப் பயணிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் மாறுபட்ட வகையிலான வாழ்வை வாழவேண்டியது அவசியமாக உள்ளது. [25]நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் என்பதை மறுபடியும் பரிசீலிக்க நீங்கள் விரும்பலாம். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கர்த்தருக்குக் கீழ்ப்படிய தனிநபர்களை உற்சாகப்படுத்துங்கள். இந்த வகையான வழங்குதலின் காரணத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்களிடம் வேதாகமம் சம்பந்தமாக கேள்விகள் ஏதேனும் இருக்குமானால், அந்தக் கேள்விகளை உங்களிடம் தெரியப்படுத்தும்படி அவர்களை உற்சாகப்படுத்துவதும் இவ்விடத்தில் சரியானதாக இருக்கும். அப்படியானால் இரட்சகரை அவர்கள் தேடுவதில் உங்களால் அவர்களுக்கு உதவ முடியும்.




**தேவாலயம்**